**சுருக்கம்**

பள்ளிக் கல்வித் துறை – பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்கு தற்காலிகமாக ஒப்பளிக்கப்பட்ட 478 ஆசிரியரல்லாதோர் மற்றும் அலுவலர்கள் பணியிடங்கள் 01.01.2021 முதல் 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (ப.க.4(2))த் துறை**

அரசாணை(1டி)எண்.53

நாள் 19.03.2021
திருவள்ளுவராண்டு 2052
சார்வரி, பங்குனி 6
படிக்கப்பட்டவை :–

1. அரசாணை (1டி) எண்.232, பள்ளிக் கல்வி (ப.க.4(2))த் துறை, நாள் 04.04.2017.
2. அரசாணை (1டி) எண்.253, பள்ளிக் கல்வி (ப.க.4(2))த் துறை, நாள் 12.04.2018.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.001511/எல்/இ3/2021, நாள் 27.01.2021.

–––––––––

**ஆணை**:-

பள்ளிக் கல்வித் துறையில், பள்ளிக் கல்வி இயக்குநரகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் பல்வேறு சார்நிலை அலுவலகங்களில் 478 ஆசிரியரல்லாதோர் மற்றும் அலுவலர்களின் தற்காலிக பணியிடங்கள் இணைப்பு I முதல் இணைப்பு Vல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு அரசாணைகளின்படி தோற்றுவிக்கப்பட்டு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 01.01.2017 முதல் 31.12.2017 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டது. பின்னர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 01.01.2018 முதல் 31.12.2020 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்து நிதித்துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இப்பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதத்தில், பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் அதன் கீழ் செயல்படும் சார்நிலை அலுவலகங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட 478 ஆசிரியரல்லாதோர் மற்றும் அலுவலர்கள் தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் 31.12.2023 வரை மூன்று ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வாணையின் இணைப்பு I முதல் இணைப்பு Vஇல் குறிப்பிடப்பட்டவாறு பல்வேறு அரசாணைகளின்படி, பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 478 அலுவலர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு இணைப்பு 1–ல் 319 பணியிடங்கள் இணைப்பு 2–ல் 52 பணியிடங்கள், இணைப்பு 3–ல் 61 பணியிடங்கள், இணைப்பு 4–ல் 2 பணியிடங்கள் மற்றும் இணைப்பு 5–ல் 44 பணியிடங்கள் ஆக மொத்தம் 478 தற்காலிக பணியிடங்கள்) 01.01.2021 முதல் 31.12.2023 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களுள் இணைப்பு 1–ல் குறிப்பிடப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

1) இணைப்பில் வரிசை எண்.34 முதல் 299 வரைக்கான கணக்குத் தலைப்பு:– "2202 பொதுக்கல்வி –02 இடைநிலைக்கல்வி –101 ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AA பொது பள்ளிகளின் ஆய்வு –301 சம்பளங்கள்"
(த.தொ.கு. 2202–02–101 AA 30100)

2) இணைப்பில் வரிசை எண்.1–2, 4–8, 10–13, 15–17, 19–20, 22, 23, 25–27, 29–33 வரைக்கான கணக்குத் தலைப்பு:–
"2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 001 நெறிமுறைப்படுத்துதலும், நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AA பள்ளிக் கல்வி இயக்ககம் – 301 சம்பளங்கள்" (த.தொ.கு. 2202–02–001 AA 30100)

3) இணைப்பில் வரிசை எண்.3, 9,14, 18, 21, 24 மற்றும் 28க்கான கணக்குத் தலைப்பு:– "2204–00விளையாட்டுகளும் இளைஞர் நலப்பணிகளும் – 102 மாணவர்களுக்கான இளைஞர் நலத்திட்டங்கள் – மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UB மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்டம் குறித்த செலவு – 301 – சம்பளங்கள்" (த.தொ.கு. 2204–00–102 UB 30100)

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களுள் இணைப்பு 2–ல் குறிப்பிடப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

இணைப்பு 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்கள்:–

1) முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் பணியிடங்களின் செலவினங்கள்:– "2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 101 ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AA பொது பள்ளிகளின் ஆய்வு – 301 சம்பளங்கள்" (த.தொ.கு. 2202–02–101 AA 30100)

2) மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களின் செலவினங்கள்:– "2202 பொதுக் கல்வி – 01 தொடக்கக் கல்வி – 104 ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AA மாவட்ட தொடக்கக் கல்வி சார்நிலை அதிகாரிகள் – 01 சம்பளங்கள்" (த.தொ.கு. 2202–01–104 AA 30100)

3) மண்டல உடற்பயிற்சிக் கல்வி ஆய்வு அலுவலர் பணியிடங்களின் செலவினங்கள்:– "2204 –00 விளையாட்டுகளும் இளைஞர் நலப்பணிகளும் – 101 உடற்பயிற்சிக்கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்வி நடவடிக்கைகளை ஆய்வு செய்தல் – 301 சம்பளங்கள்" (த.தொ.கு. 2204–00–101 AA 30100)

6. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களுள் இணைப்பு 3 மற்றும் 4–ல் குறிப்பிடப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

இணைப்பு 3 மற்றும் 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்கள்

முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலருடன் சேர்க்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட

"2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 101 ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AA பொது பள்ளிகளின் ஆய்வு – 301 சம்பளங்கள்''
(த.தொ.கு. 2202–02–101 AA 30100)

மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலருடன் சேர்க்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக் கல்வி – 01 தொடக்கக் கல்வி – 104 ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AA மாவட்ட தொடக்கக் கல்வி சார்நிலை அதிகாரிகள் – 301 சம்பளங்கள்'' (த.தொ.கு. 2202–01–104 AA 30100)

7. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களுள் இணைப்பு 5ல் குறிப்பிடப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 101 ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AA பொது பள்ளிகளின் ஆய்வு – 301 சம்பளங்கள்''
(த.தொ.கு. 2202–02–101 AA 30100)

8. தற்காலிகப் பணியிடங்களில் மிகைப் பணியிடங்கள் என கண்டறியப்பட்டுள்ள இனங்களில் ஏற்படும் காலிப்பணியிடங்களை, மிகைப் பணியிடங்களின் எண்ணிக்கை அளவிற்கு நிரப்புதல் கூடாது என பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது
.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.6533/கல்வி–II/2021, நாள் 27.02.2021–ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை (கிழக்கு)/சென்னை (வடக்கு)/
சென்னை (தெற்கு).
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
நகல்
நிதித் (கல்வி–II)த் துறை, சென்னை–9.
நகல்
இ.கோ / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஒ.மாலதி
19/3/21
பிரிவு அலுவலர்

19/03/2021

(நகல்): தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது